***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.85/2024 – P.W.1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | பிரவின் |
| *Father/Husband's Name* | ராமச்சந்திரன் |
| *Village* | பெருகவாழ்ந்தான் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *24* |

**எதிரி 1 ஆஜர். 2 வது எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 26.11.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கேரளாவில் பைக் ஷோரூமில் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் ஊர்க்காரர்கள்.

2. கடந்த 04.03.2024 ம் தேதியன்று இரவு 08.00 மணியளவில் அண்ணா தெருவில் விக்னேஷ் என்பவரின் வீட்டு வாசலில் நின்று நானும் விக்னேஷ், வீரமணி, வினோத் ஆகியோர்கள் நின்று பேசிக்கொண்டிருந்தோம். பேசிவிட்டு செல்லும்போது எதிரே வந்த 2 வது எதிரி பிரபாகரனை பார்த்து நான் நலம் விசாரித்தேன். அதற்கு நீ என்னடா என்னை கேட்கிறது புண்டா மவனே என்ற கெட்ட வார்த்தையால் என்னை திட்டினார். அவருடன் பேசினார் பிரச்சினை வரும்மாதிரி இருந்தது. எல்லோரும் சமாதானம் செய்தார்கள்.. நான் வீட்டிற்கு போய்விட்டேன்.

3. நான் வீட்டில் படுத்துக்கொண்டிருந்தபோது எனது வீட்டு வாசலில் வெளியே வாடா தேவடியா மவனே என்று சத்தம் கேட்டது. நான் வெளியே போய் பார்த்தேன். அப்போது பற்குணம், அவரது மகன் பிரபாகரன் இருவரும் கட்டை மற்றும் கம்பியை வைத்துக்கொண்டு நின்றார்கள். நான் என்னவென்று கேட்டு பேசிக்கொண்டிருக்கும்போதே இருவரும் என்னை இரண்டு கைகளிலும் அடிக்க

ஆரம்பித்துவிட்டனர். நான் வலி தாங்கமுடியாமல் தடுக்கும்போது எனது இடது பக்க உச்சந்தலையில் கட்டையால் அடித்தார்கள். எனது இடது கையில் பைப் போன்ற கம்பியால் அடித்தார்கள். சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் கூடிவிட்டார்கள். கூட்டத்தினை பார்த்ததும் இன்னைக்கு தப்பிச்சிட்ட என்னைக்கிருந்தாலும் என் கையில் தான்டா உனக்கு சாவு என்று சொன்னார்கள். பிறகு அருகில் இருந்தவர்கள் என்னை காவல்நிலையத்திற்கு பைக்கில் அழைத்துச் சென்றார்கள். பிறகு அங்கிருந்து ஆம்புலன்ஸ் மூலமாக மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். மன்னார்குடி அரசு மருத்துவமனையில் எனது தலையில் ஏற்பட்ட காயத்திற்கு தையல் போட்டார்கள். இடது கையிலும், தலையிலும் ஸ்கேன் செய்ய வேண்டும் என்பதற்காக அங்கிருந்து என்னை திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைத்தார்கள். திருவாரூர் மருத்துவமனையில் ஸ்கேன் செய்து பார்த்ததில் எனது இடது கை முட்டியில் உள்ள எலும்பு பிராக்சர் ஆகிவிட்டதாகவும் பிளேட் வைத்து ஆபரேஷன் செய்தனர். எனது இடது கை எலும்பு உடைந்ததால் 3 மாத காலம் வேலைக்கு செல்லாமல் ஓய்வில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது போலிசார் வந்து விசாரித்தார்கள். அவர்களிடம் நடந்த விவரங்களை சொன்னேன். நான் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டார்கள். படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன்.

3. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எ**<u>திரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் எனது பாட்டியுடன் அவரது வீட்டில்தான் வசித்து வருகிறேன் என்றால் - சரிதான். எங்கள் தெரு என்பது அண்ணா தெரு துண்டுதெரு என்றால் - சரிதான். எங்கள் தெருவில் உள்ள சாலையானது சிமிண்ட் சாலை என்றால் - சரிதான்.

2. நடந்ததாக சொல்லப்படும் சம்பவ நேரம் நல்ல இருட்டு நேரம் என்றால் - சரிதான். எங்கள் தெருவில் மின்விளக்குகள் எதுவும் இல்லை என்றால் - சரிதான்.

3. இரவு 08.30 மணியளவில் எனது நண்பர் விக்னேஷ் வீட்டு வாசலில் நானும் எனது நண்பர்கள் சுமார் 5,6 நபர்கள் நின்றுக்கொண்டிருந்தோம் என்றால் - சரிதான். அப்போது 2 வது எதிரி பிரபாகரன் தனியாக தான் வந்தார் என்றால் - சரிதான். எனது நண்பர்களுடன் நான் மது அருந்திவிட்டு அந்த வழியாக தனியாக வந்த 2 ம் எதிரியை

வழிமறித்து பிரச்சினை செய்தேனா என்றால் - இல்லை. 08.30 மணியளவில் நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தின்போது சுமார் 20 நிமிடங்கள் வாக்குவாதம் ஏற்பட்டது என்றால் - சரிதான். நானும் பேசினேன் 2 ம் எதிரியும் பேசினார் என்றால் - சரிதான். 2 ம் எதிரி பேசியதால் எனக்கு மன வருத்தம் ஏற்பட்டது என்றால் - சரிதான்.

4. இரவு 10.00 மணிக்கு நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தின்போது எனது தெருவில் யாருமே இல்லை என்றால் - சரிதான். நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தின்போது எதிரிகள் என் வீட்டு வாசலுக்கு வந்ததாக சொல்லப்படும் போதும் என்னை தவிர அங்கு வேறு யாரும் இல்லை என்றால் - சரிதான்.

5. எனக்கு கம்பு, கம்பி, கட்டை, பைப் ஆகியவற்றிற்கு நன்கு வித்தியாசம் தெரியும் என்றால் - சரிதான். என்னை தாக்கியதாக சொல்லப்படும் கட்டை சுமார் எத்தனை அடி நீளம் இருக்கும் என்றால் - 4 அடி நீளம் இருக்கும். என்ன வகையான கட்டை என்றால் - கருவைக்கட்டை. இந்த விவரத்தினை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் - சொல்லியுள்ளேன்.

6. சம்பவத்தின்போது மயங்கிய நான் எப்போது கண் விழித்து தெளிவான நிலைக்கு வந்தேன் என்றால் - திருவாரூர் மருத்துவமனைக்கு செல்லும்போது தெளிவான நிலைக்கு வந்துவிட்டேன். மன்னார்குடி அரசு மருத்துவமனையில் அரை மயக்கத்தில் இருந்தேன். மன்னார்குடி அரசு மருத்துவமனையில் அரை மயக்க நிலையில் நான் இருந்ததால் மருத்துவரிடம் யார் விவரங்கள் சொன்னது என்றால் - என்னுடன் வந்த அஜித்கண்ணன் என்பவர் தான் மருத்துவரிடம் விவரங்களை சொன்னார்.

7. பெருகவாழ்ந்தான் காவல்நிலையத்திற்கு சென்று புகார் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் - சம்பவம் நடந்த உடன் நேரடியாக பெருகவாழ்ந்தான் காவல்நிலையம் தான் சென்றேன். என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்களா என்றால் - இல்லை. போலிசார் தான் என்னை ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பினார்கள் என்றால் - சரிதான்.

8. போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் யார் எப்படி எந்த ஆயுதத்தினால் தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - தலையிலும் கையிலும் அடித்தார்கள் என்று சொன்னேன். ஆனால் போலிசார் அதுக்குறித்து எழுதாமல் விட்டுள்ளார்கள்.

9. புகார் வாக்குமூலத்தில் நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தினை நேரடியாக பார்த்த நபராக நான் யாரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - சரிதான்.

ஏனென்றால் நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தின்போது யாருமே அங்கில்லை என்றால் -சரிதான்.

10. இரவு நேரம் என்பதால் யார் எவ்வாறு தாக்கினார்கள் என்று நான் பார்க்கவில்லை என்றால் - சரியல்ல. நான்பார்த்தேன். நான் தான் மது அருந்திவிட்டு எதிரிகளிடம் போய் வம்புக்கு இழுத்தேன் என்றால் - சரியல்ல. நடந்ததாக சொல்லப்படும் சம்பவமானது எனது வீட்டு வாசலில்தான் நடைப்பெற்றது என்றால் - சரிதான். இந்த விவரத்தினை போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான்.

11. எதிரிகளின் மீதிருந்த வருத்தத்தின் காரணமாக நான் மது அருந்திவிட்டு எதிரிகளை தாக்க சென்றபோது சிமிண்ட் ரோட்டில் தவறி கீழே விழுந்து காயத்தினை ஏற்படுத்திக்கொண்டு அந்த காயத்தினை பயன்படுத்தி எதிரிகளை இந்த வழக்கில் தொடர்புப்படுத்தி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல. தற்போது கடந்த 2 மாதங்களாக கேரளாவில் அன்றாட எனது வேலைகளை பார்த்து வருகிறேன் என்றால் - சரிதான்.

12. கைக்கு எடுக்கப்பட்ட ஸ்கேன் ரிப்போர்ட்டுகளை போலிசார் வாங்கிக்கொண்டார்களா என்றால் - இல்லை. என்னிடம் தான் உள்ளது. எதிரிகள் மீதுள்ள வருத்தத்தின் காரணமாக எதிரிகளை தொடர்புப்படுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

M SURESHKARTHIK

Digitally signed by M SURESHKARTHIK
Date: 2024.11.26 16:28:33 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.